மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச் சட்ட முன்வடிவை அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத் தப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோரு கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : இச் சட்ட முன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/72)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clause 2, and the Schedule were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/72) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு, சட்ட மாக நிறைவேற்றப்பட்டது.